**தலைப்பு 152–நீர்ப்பாசன, நீர்வளங்கள் முகாமைத்துவ அமைச்சு மற்றும் அவ்வமைச்சின் கீழுள்ள திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2014 ஆம் ஆண்டு**

---

**இவ்வறிக்கையின் 1 ஆம் பந்தியிலும் 2 ஆம் பந்தியிலும் நீர்ப்பாசன, நீர்வளங்கள் முகாமைத்துவ அமைச்சு மற்றும் அவ்வமைச்சின் கீழுள்ள நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கணக்குகள் தொடர்பான பொதுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், 3 ஆம் பந்தியிலிருந்து ஒவ்வொரு தலைப்பிற்குமுரிய கணக்காய்வு அவதானிப்புக்கள் காண்பிக்கப்பட்டுள்ளன.**

**1. அமைச்சின் கீழுள்ள திணைக்களம்**

| தலைப்பு | திணைக்களம் |
|---|---|
| 282 | நீர்ப்பாசனத் திணைக்களம் |

**1.1. கணக்காய்வின் நோக்கெல்லை**

மேற்படி 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட நீர்ப்பாசன, நீர்வளங்கள் முகாமைத்துவ அமைச்சு மற்றும் அந்த அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகள் கீழே காட்டப்பட்டுள்ள திகதிகளில் அவ்வமைச்சின் செயலாளருக்கும் திணைக்களத் தலைவருக்கும் வழங்கப்பட்டன. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர்,ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

| தலைப்பு | அமைச்சு / திணைக்களம் | முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகள் வழங்கப்பட்ட திகதி |
|---|---|---|
| 152 | நீர்ப்பாசன, நீர்வளங்கள் முகாமைத்துவ அமைச்சு | 2015 ஆகஸ்ட் 14 |
| 225 | நீர்ப்பாசனத் திணைக்களம் | 2015 செப்தம்பர் 04 |

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்கப் பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பிக்கப்படுவதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் நடாத்தலும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### (அ) மொத்த நிதி ஏற்பாடு மற்றும் செலவினம்

அமைச்சு மற்றும் அந்த அமைச்சின் கீழுள்ள திணைக்களத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடுரூபா 50,120 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு அதில் ரூபா 44,942 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தமையால் அமைச்சினதும் திணைக்களத்தினதும் தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்தான சேமிப்புகள் முறையே ரூபா 5,162.0 மில்லியன் மற்றும் ரூபா 16.3 மில்லியன் அல்லது தேறிய நிதி ஏற்பாட்டில் 13.9சதவீதம் மற்றும் 0.1 சதவீதமாக இருந்தன.விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| தலைப்பு | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புகள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புகள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| 152 | 37,257.1 | 32,095.1 | 5,162.0 | 13.9 |
| 282 | 12,863.3 | 12,847.0 | 16.3 | 0.1 |
| மொத்தம் | 50,120.4 | 44,942.1 | 5,178.3 | 10.3 |

## (ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளின் பயன்பாடு

பல்வேறு பணிகளுக்காக ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்களினால் ரூபா 1,378 மில்லியன் கூட்டு மொத்தமான நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 976 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| நிதி ஏற்பாட்டினை பெற்றுக் கொண்ட திணைக்களம் | நிதி ஏற்பாட்டினை வழங்கிய அமைச்சு/ திணைக்களம் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | |
|---|---|---|---|---|
| | | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புகள் |
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| நீர்ப்பாசனத் திணைக்களம் | நீர்ப்பாசன, நீர்வளங்கள் முகாமைத்துவ அமைச்சு | 1,343 | 965 | 378 |
| | காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு | 6 | 6 | - |
| | கமநலசேவைகள் திணைக்களம் | 24 | 4 | 20 |
| | வனசீவராசிகள் திணைக்களம் | 5 | 1 | 4 |
| | மொத்தம் | 1,378 | 976 | 402 |

**2.2 முற்பணக் கணக்குகள்**

**2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்திற்குரியமீளாய்வாண்டின் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| விடய இல | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானவை | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானவை |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 15201 | 10.0 | 9.8 | 6.0 | 7.6 | 36.0 | 31.5 |
| 28201 | 130.0 | 120.0 | 97.0 | 99.0 | 500.0 | 359.0 |

**2.3 கட்டு நிதிக் கணக்குகள்**

2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அமைச்சின் கட்டு நிதிக் கணக்குகளின் மீதி ரூபா 4 மில்லியனாக இருந்தது.

**2.4 பொது வைப்புக் கணக்குகள்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 576 மில்லியனாகும். விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| அமைச்சு / திணைக்களம் | வைப்புக் கணக்கின் இலக்கம் | 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | ரூபா. மில்லியன் |
| நீர்ப்பாசன மற்றும் நீர்வளங்கள் முகாமைத்துவ அமைச்சு | 6000/0000/00/0015/0063/000 | 37 |
| நீர்ப்பாசனத் திணைக்களம் | 6000/0000/00/0001/0022/000 | 11 |
| | 6000/0000/00/0015/0137/000 | 528 |
| மொத்தம் | | 576 |

## 2.5 கணக்காய்வு அவதானிப்புகள்

2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் அமைச்சினதும் அதன் கீழான திணைக்களத்தினதும் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களுக்கு உட்பட திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியிலிருந்து குறிப்பிடப்பட்டுள்ளன.

# 3. தலைப்பு 152 – நீர்ப்பாசன, நீர்வளங்கள் முகாமைத்துவ அமைச்சு

## 3.1 பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை

அமைச்சினால் பின்வரும் சில புத்தகங்கள் பேணப்பட்டிராததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிராமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின்போது அவதானிக்கப்பட்டன.

| பதிவேட்டின் வகை | உரிய பிரமாணங்கள் | அவதானிப்புகள் |
|---|---|---|
| நட்டங்கள் தொடர்பான பேரேடு | நிதிப் பிரமாணம் 110 | பேணப்பட்டிருக்கவில்லை |
| பொறுப்புகள் தொடர்பான பேரேடு | நிதிப் பிரமாணம் 214 | பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை |
| திணைக்கள ஒதுக்கீட்டு (வாக்குப் பண) பேரேடு | நிதிப் பிரமாணம் 447 | நாளதுவரையாகபேணப்பட்டிருக்கவில்லை |

**3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள், காணிப் பதிவாளர் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட உறுதிகள் போன்ற தேவையான சான்றுகள் அமைச்சில் காணப்படாமையால் ரூபா 6,336,539 கூட்டுத் தொகைக்குரிய 33 கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின்போது உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**3.3 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளித்தல்**

மீளாய்வாண்டின்போது அமைச்சிற்குச் சமர்ப்பிக்கப்பட்ட 08 கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் முன்னைய ஆண்டுகளின்போது வழங்கப்பட்ட 04 கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் 2015 மார்ச் 31 ஆம் திகதியளவிலும் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**பாதீட்டு முரண்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) செலவின விடயமொன்றிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 350,000,000 தொகையான மொத்த தேறிய நிதி ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) இருபத்தெட்டு செலவின விடயங்களுக்கு மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த காரணத்தால் அந்த ஏற்பாடு பயன்படுத்தப்பட்டதன் பின்னரான தேறிய நிதி ஏற்பாட்டுச் சேமிப்பு ரூபா 4,477,253,220 ஆகும். அது மேற்கொள்ளப்பட்டிருந்த தேறிய நிதி ஏற்பாட்டில் 7 சதவீதத்திலிருந்து 96 சதவீதம் வரையான வீச்சளவைக் கொண்டிருந்தது.

## 3.5 பொது வைப்புக் கணக்கு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இரண்டு ஆண்டுகள் கடந்திருந்த ரூபா 3,465,569 கூட்டுத் தொகையான வைப்புகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வைப்புப் பதிவேடுகள் மற்றும் திறைசேரி பொது வைப்புக் கணக்கின் மீதியில் ரூபா 501,852 வேறுபாடு காணப்பட்ட போதிலும்,நிதிப் பிரமாணம் 427 இன் பிரகாரம் இணக்கம் செய்யப்பட்டு 2014 திசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.6 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

15201 ஆம்விடய இலக்க முற்பணக் கணக்கு தொடர்பான 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்று தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின்போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம் அத் திகதியில் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 1,972,141 ஆக இருந்ததுடன், அந்த நிலுவை மீதிகள் 1 ஆண்டு முதல் 19 ஆண்டுகள் வரையான காலம் கடந்திருந்த போதிலும், அந் நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதின் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டன.

(ஆ) அமைச்சினால் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பேணப்படும் கடன் மற்றும் முற்பண மீதிகள் காண்பிக்கப்படும் தனிப்பட்ட கணக்கு மீதிகள் பதிவேடு மற்றும் இணக்கக் கூற்றின் பட்டோலைகளுக்கிடையே ரூபா 434,066 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(இ) உறுப்பினர் கடன் பதிவேட்டினைப் பேணுகையில் தெளிவற்ற விதத்தில் எழுதியிருந்தமை, அதிகாரமின்றி மாற்றியிருந்தமை, அழிக்கும் மை பயன்படுத்தப்பட்டு மாற்றஞ் செய்யப்பட்டிருந்தமை, ஒன்றின் மேல் ஒன்று எழுதப்பட்டிருந்தமை போன்றவை அவதானிக்கப்பட்டன.

(ஈ) இணக்கக் கூற்றுடன் சமர்ப்பிக்கப்பட்ட கடன் பட்டோலை மற்றும் கடன் பதிவேட்டின் பிரகாரம் மீதிகளில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**3.7 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

---

**3.7.1 வருடாந்தக் கொள்வனவுத் திட்டம்**

---

2006 மார்ச் 24 ஆம் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.7.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

---

நிர்ணயிக்கப்பட்டதன் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் திருத்தம் செய்யப்படவில்லை.

**3.8 சொத்துக்கள் முகாமைத்துவம்**

---

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின்போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அமைச்சின் மேற்பார்வையின் கீழ் இருந்த மதாடுகம மற்றும் தம்புத்தேகம இயந்திர வேலைத் தளங்களில் பழுதுபார்க்கப்பட முடியாத நிலையில் வாகனங்கள் முறையே 17 மற்றும் 09 வாகனங்கள் காணப்பட்ட போதிலும், அவ்வாகனங்களும் அதற்கு மேலதிகமாக அடையாளங் காண்பதற்கு சிரமமான பவுசர், உழவு இயந்திரங்கள், டிரெய்லர் மற்றும் இயந்திர உபகரணங்கள் என்பவற்றை கைதவிர்ப்பதற்கு அமைச்சு எவ்வித நடவடிக்கைகளையும் எடுத்திருக்கவில்லை. இவ்வாகனங்கள்

விளைவற்றுக் காணப்பட்ட காலம் தொடர்பான தகவல்கள் இயந்திரசாதனத் தொழிற்சாலையில் இருக்கவில்லை.

(ii) யோகட் உற்பத்தி அலகொன்று கொள்வனவு செய்யப்பட்டு நிராவிய பண்ணையில் 2013 நவம்பர் 26 ஆந் திகதி பொருத்தப்பட்டிருந்த போதிலும், அந்த இயந்திரத்திலிருந்து எவ்வித உற்பத்தியும் 2014 மே 22 ஆந் திகதி வரை இடம்பெற்றிருக்கவில்லை. இவ்வியந்திரத்திற்காக ரூபா 3,224,636 தொகையான இரண்டாவது தவணைப்பணம் மீளாய்வாண்டின்போது வழங்குனருக்கு செலுத்தப்பட்டிருந்ததுடன், ரூபா 2,099,994 ஆன நிறுத்திவைத்தல் தொகை 2014 திசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் செலுத்தப்பட வேண்டியிருந்தது. இவ்வியந்திரம் பொருத்தப்பட்ட பண்ணை இலங்கை மஹாவலி அதிகாரசபைக்குரிய தாகையால் தற்போது அந்த அதிகாரசபை வேறொரு அமைச்சின் கீழ் உள்ளமையால் இம்முதலீட்டின் எதிர்காலத்தின் நிலைத்திரு தன்மை சர்ச்சைக்குரியதாகும்.

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்தப்படல்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2014 ஒக்டோபர் 17 ஆம் திகதிய 02/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2014 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கை 2015 மார்ச் 17 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அமைச்சு 2015 மே 31 ஆந் திகதியளவிலும் அவ்வறிக்கைகளைக் கணக்காய்விற்குச் சமர்ப்பித்திருக்கவில்லை.

(ii) 2014 ஆம் ஆண்டின் வருாந்த மெய்மையாய்வு அறிக்கை 2015 யூன் 18 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், அமைச்சிற்குரிய உப அலுவலகங்கள், அலகுகள் மற்றும் பிரிவுகள் இயந்திர வேலைத்தளங்கள் அனைத்தும் மேவுகை செய்யப்படக்கூடிய வகையில் அது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(இ) வெளித் தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

அமைச்சினால் சில சொத்துக்கள் முறையற்ற விதத்தில் வெளித் தரப்பினருக்கு விடுவிக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| சொத்துக்களின் வகை | சொத்துக்களின் எண்ணிக்கை | சொத்துக்கள் வழங்கப்பட்டுள்ள நிறுவகம் | பெறுமதி | காலப்பகுதி |
|---|---|---|---|---|
| | | | ரூபா | |
| நீர் பவுசர் | 06 | மதாடுகம இயந்திர வேலைத்தளம் | 22,780,500 | 2013 ஆம் ஆண்டு முதல் |
| மின் பிறப்பாக்கி இயந்திரங்கள் | 01 | மதாடுகமஇயந்திர வேலைத்தளம் | 2,352,000 | 2013 ஆம் ஆண்டு முதல் |

**(ஈ) தீர்க்கப்படாத பொறுப்புகள்**

ஒதுக்கீட்டுக் கணக்கின் பிரகாரம் அமைச்சினால் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒரு வருடத்திற்கும் குறைவான காலப்பகுதியிலிருந்து வரும் தீர்க்கப்படாத ரூபா 2,929,830,590 தொகையான பொறுப்புகள் காணப்பட்டன. ஒதுக்கீட்டுக் கணக்கில் ரூபா 3,082,276,046 ஆன பொறுப்புகள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

**3.9 இணக்கமின்மை**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்கியிராத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டுக் காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | |
| (i) நிதிப் பிரமாணம் 65(1),66(2), 138(1) மற்றும் 227 | 138,667,354 | மூலதன நிதி ஏற்பாடு மீண்டெழும் செலவினத்திற்காகப் பயன்படுத்தப் பட்டிருந்தது. அவ்வாறே, மீண்டெழும் செலவினம் மூலதனச் செலவினமாக கணக்குப் பொழிப்புகள் மூலம் திறைசேரிக்கு அறிக்கையிடப்பட்டிருந்தது. |
| (ii) நிதிப் பிரமாணம் 94 | 2,895,768,732 | இருபத்தேழு செலவின விடயங்களுக்கு மேற்கொள்ளப்பட்டிருந்த தேறிய நிதியேற்பாட்டில் பயன்படுத்தியதன் பின்னரான சேமிப்புகளை மிகைத்து ரூபா 2,895,768,732 தொகையான பொறுப்புகளுக்கு கடப்பாடு மேற் கொள்ளப்பட்டிருந்தது. |
| (ஆ) பொது நிர்வாகச் சுற்றறிக்கை | | |
| 1995 ஜுலை 14 ஆந் திகதிய 24/95 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | - | நீர்ப்பாசனத் திணைக்களத்தின் 75 சாரதி பதவிகளுக்கு ஆட்சேர்க்கப்படும் போது புள்ளி வழங்கல் முறைமை விண்ணப்பம் கோரும் சந்தர்ப்பத்தில் வெளியிடப்பட்டிருக்கவில்லை. |
| (இ) முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை<br>2007 ஏப்ரல் 05 ஆந் திகதிய 33 ஆம் இலக்க | 630,000 | சுற்றறிக்கைப் பிரகாரம் செயற்திட்டப் பதவியணியினருக்கு சம்பளக் கொடுப்பனவின் போது அச் செயற்திட்டம் தொடர்ச்சியாக காணப்பட வேண்டிய போதிலும், பீஸ் |

| | |
|---|---|
| சுற்றறிக்கை | (PEACE) செயற்திட்டம் 2013 மே மாதத்தின்போது நிறைவு செய்யப்பட்டதன் பின்னரும் அதன் இரண்டு கணக்காளர்களுக்கும் அமைச்சின் நிதி ஏற்பாட்டிலிருந்து 03 மாதங்களுக்கு சம்பளம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |

## 3.10 வெளிநாட்டு உதவி செயற்திட்டம்

மீளாய்வாண்டின்போது அமைச்சினால் வெளிநாட்டு நிதியளிப்பின் கீழ் செயற்படுத்தப்பட்ட 06 செயற்திட்டங்களின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 72,216,500,000 கூட்டுத் தொகையாக இருந்ததுடன், அச்செயற்திட்டங்களுக்காக மீளாய்வாண்டின்போது ரூபா 24,347,973,680 பயன்படுத்தப்பட்டிருந்தமை தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) செயற்திட்ட வங்கிக் கணக்கு மூடப்படாமை.

2013 மே மாதத்தின்போது கணக்கொழிப்புக்குள்ளாகிய PEACE செயற்திட்டத்தினால் இலங்கை வங்கியில் பேணப்பட்ட வங்கி நடைமுறைக் கணக்கு மீளாய்வாண்டின் இறுதி வரையில் மூடப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) வெளிநாட்டு உதவிச் செயற்திட்டத்தைக் கணக்கொழிப்புக்குள்ளாக்குதல்

PEACE செயற்திட்டம் 2013 மே மாதத்தின்போது கணக்கொழிப்புக்குள்ளாகிய போதும், கணக்குகளை தயாரித்தல், செயலாற்றல் மற்றும் கணக்கொழிப்பு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதியளவான கணக்காய்வு அவதானிப்புகள் காரணமாக 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளுக்காக கொடுப்பனவுகளிலிருந்து விடுவிக்கும் சான்றிதழ்களை வழங்குவதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களுக்கு முடியாதிருந்தது.

**(இ) அணைக்கட்டு பாதுகாப்பு மற்றும் நீரியல் வளங்கள் திட்டமிடல் செயற்திட்டம்**

---

இச்செயற்திட்டம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின்போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(i) 4406 - CE ஆம் இலக்க நிதி உடன்படிக்கையின் மூன்றாவது பகுதியின் ஏ,பீ மற்றும் சீ இன் பிரகாரம் செயற்திட்டத்தினால் தயாரிக்கப்பட வேண்டிய தேசிய நீர் பயன்பாட்டு திட்டம், நாளதுவரையாக்கப்பட்ட மஹாவலி நீர் வள அபிவிருத்தி திட்டம் மற்றும் முன்தெனிஆறு துரோனி அபிவிருத்தித் திட்டம் என்ற அபிவிருத்தி திட்டம் செயற்திட்டத்தினால் ரூபா 479 மில்லியன் கிரயத்தில் 2013 ஆம் ஆண்டின்போது மதியுரையாளர்கள் மூலம் தயாரிக்கப்பட்டு முடிவடைந்திருந்த போதிலும், அத்திட்டங்களை அமுல்படுத்தும் நிலைக்குக் கொண்டு செல்வதற்காக அதனை அமைச்சரவைக்குச் சமர்ப்பிப்பதற்கு 2015 மே 31 ஆந் திகதியளவிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) முப்பத்திரண்டு, நீர்த்தேக்கங்களின் அணைக்கட்டுகளில் அமைப்பு வேலைகளுக்காக மதிப்பீடு தயாரிப்பதற்காக ரூபா 491 மில்லியனான மதிப்பீட்டு கிரயத்திற்கு வெளிநாட்டு மதியுரையாளர் கம்பனிக்கு செயற்திட்டத்தினால் ஒப்பந்தமொன்று வழங்கப்பட்டிருந்ததுடன்,மதியுரைக்கம்பனியால் இணங்கப்பட்டதன் பிரகாரம் அது தொடர்பான கிரய மதிப்பீடு தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அம்மதிப்பீட்டிற்கு மேலதிகமாக ரூபா 612.7 மில்லியனான அணைக்கட்டு தொடர்பான மேதிக வேலைகள் செயற்திட்டத்தினால் பின்னர் இனங்காணப்பட்டிருந்தன.

(iii) மீளாய்வாண்டின்போது செயற்திட்டத்தினால் ரூபா 170.4 கிரயத்தில் 03 எக்ஸவேடர்கள், 08 டிபர்கள் மற்றும் 03 ஏரியல் பிளட்போம் இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இவ்வியந்திரங்களின் தொழில்நுட்ப மாதிரிகளை தீர்மானிப்பதற்கு முன்னர் அவ்வியந்திரங்களிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட பயன்பாடு முறையாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. அவ்வியந்திரங்கள் இலங்கை மஹாவலி அதிகாரசபையினதும் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பயன்பாட்டிற்கும் வழங்கப்பட்டிருந்த போதிலும்,

அவை குறைப் பயன்பாட்டிற்கு உட்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(iv) நாலந்த அணைக்கட்டினை அமைக்கும் வேலைக்காக ரூபா 382.99 மில்லியனான மதிப்பிடப்பட்ட கிரயத்திற்கு 2013 மே 28 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்த ஒப்பந்தம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- கிரய மதிப்பீட்டின் பிரகாரம் நாலந்த அணைக்கட்டு அமைக்கும் வேலை தொடர்பான கிரயம் ரூபா 267.9 மில்லியனாக இருந்தது. எவ்வாறாயினும், 2013 மே 28 ஆந் திகதி ரூபா 382.99 மில்லியனுக்கு அதாவது 42 சதவீதமான மதிப்பீட்டை விஞ்சிய பெறுமதிக்கு உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டிருந்தது. 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 254.5 மில்லியன் பெறுமதியான விலகல் கட்டளையும் ஒப்பந்தகாரரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மேலும், புதிய உடன்படிக்கையொன்றை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் ரூபா 160.38 மில்லியன் கிரயத்திலான உடன்படிக்கையின் செயற்பாடுகளுக்கு நேரடியாக தொடர்புபடாத செயற்பாடுகள் இருக்கும் ஒப்பந்தத்தின் விலகலாக வகைப்படுத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 32.08 மில்லியனான வேலை முற்பணமாக செலுத்தப்பட்டிருந்தது.

- ஒப்பந்தகாரர்களுக்கு வசதிகளை வழங்குவதற்காக மீளாய்வாண்டின்போது செயற்திட்டத்தினால் மாதமொன்றிற்கு ரூபா 2.5 மில்லியன் வீதம் பணம் செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அது தொடர்பாக எந்தவொரு எழுத்துமூல சான்றொன்றும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(v) 2007 ஏப்ரல் 05 ஆந் திகதிய 33 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் தேவையான தகைமைகள் மற்றும் அனுபவம் என்பவற்றை பூர்த்தி செய்திராத இரண்டு பொறியியலாளர்களும் இரண்டு கணக்காளர்களும் 2014 சனவரி 01 ஆந் திகதி முதல் செயற்திட்டத்திற்காக ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். அத்தோடு

செயற்திட்டத்தினால் குறுகிய காலத்திற்காக இரண்டு மதியுரையாளர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். எவ்வாறாயினும், அவர்களுக்கு எந்தவொரு பணிப்பொறுப்போ அல்லது கடமைப் பட்டியலோ வழங்கப்பட்டிருக்கவில்லை. மேலும், ஒரு மதியுரையாளர் கொள்வனவு விசேடத்துவ உதவியாளராக 68 மாதங்கள் சேவை புரிந்திருந்தார்.

(vi) முன்னைய ஆண்டுகளுக்குரிய கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், 2014 திசெம்பர் 31 ஆந் திககதியளவிலும் அவற்றைச் சீராக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- சேனாநாயக்க சமுத்திரம், சமனல வாவி மற்றும் விக்டோரியா நீர்த்தேக்க அணைக்கட்டு தொடர்பாக காணப்படும் சிக்கல்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.
- பொல்கொல்ல சுரங்கத்தின் அமைப்பு வேலை தொடர்பாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
- 2011 ஆம் ஆண்டின்போது ரூபா 123,776,014 கிரயத்தில் (பெறுமதி சேர் வரி தவிர்த்து) 2WD சேவை 5 மொபைல் டிரக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், அவ்வாகனங்களின் பயன்பாடு தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.
  - இந்த டிரக் வண்டிகள் எப்போதாவது பயன்படுத்தப்படுவதாகவும் அவ்வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்ட 2011 ஆகஸ்ட் மாதத்திலிருந்து 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் அந்த 05 டிரக் வண்டிகளில் 04 இனது எரிபொருள் பயன்பாடு 2,224.67 லீற்றர்களாக மாத்திரம் இருந்தமை அவதானிக்கப்பட்டது. நீர்ப்பாசனத் திணைக்களத்தின் ரம்பேவ வேலைத்தளத்தில் இணைக்கப்பட்டிருந்த எஞ்சிய டிரக் வண்டிக்கு 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 5,735 லீற்றர் எரிபொருள் பயன்படுத்தப்பட்டிருந்தது.
  - அந்த 05 டிரக் வண்டிகளில் 3 நோக்கத்திற்குட்பட்ட செயற்பாடான அணைக்கட்டு

பராமரிப்பு நடவடிக்கைகளுக்கு ஈடுபடுத்துவதற்குப் பதிலாக நீர்ப்பாசனத் திணைக்களத்தின் இயந்திர வேலைத் தளங்களிற்கும் இலங்கை மஹாவலி அதிகாரசபைக்கும் இணைக்கப்பட்டிருந்தன.

மேற்குறிப்பிட்ட காரணங்களினால் இந்த டிரக் வண்டிகள் குறைப் பயன்பாட்டிற்கு உட்பட்டிருந்ததுடன் அதற்காக செலவிடப்பட்ட கொள்வனவுக் கிரயம் மற்றும் அதன் பராமரிப்பு நடவடிக்கைகளுக்கான செலவினம் சிக்கனமற்றதாகவும் பயனற்றதாகவும் இருந்தது.

- செயற்திட்ட முகாமைத்துவ அலகு, நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் இலங்கை மஹாவலி அதிகாரசபை என்பவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்திய மூன்று உத்தியோகத்தர்கள் 2012 ஆகஸ்ட் 20 ஆந் திகதி முதல் 27 ஆந் திகதி வரை ஐக்கிய அமெரிக்க குடியரசில் நடைபெற்ற ''யூஎஸ்பீஆர்'' பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்கு சமூகமளித்திருந்தனர். நிகழ்ச்சிக்கு சமூகமளித்த உத்தியோகத்தர்களின் அனைத்து தங்குமிட மற்றும் உணவு, பானங்களுக்கான கட்டணங்கள் அமைப்புக்கு செலுத்தப்பட்டிருந்த பதிவுக் கட்டணமான 11,400 ஐ.அ.டொலர்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது, அக்கொடுப்பனவின்போது உள்ளடக்கம் கருத்திற் கொள்ளப்படாமல் செயற்திட்டத்தினால் சமூகமளித்த உத்தியோகத்தர்களுக்கு படிகள் செலுத்தப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் ஒரு உத்தியோகத்தருக்கு 2,205 ஐ.அ.டொ. வீதம் மூன்று உத்தியோகத்தர்களுக்கு 6,615 ஐ.அ.டொ(ரூபா 866,643)கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது.

**(ஈ) அணைக்கட்டு பாதுகாப்பு மற்றும் நீர் வளங்கள் திட்டமிடல் செயற்திட்டம் (மேலதிக நிதியீட்டம்)**

---

மினிப்பே அனைத்து முடிவு கால்வாய் புனரமைப்பு ஒப்பந்தத்திற்காக இரண்டாவது குறைந்த கூறு விலைதாரரால் தொழில்நுட்ப மதிப்பீட்டு செயற்பாட்டிற்குத் தேவையான அனைத்து தேவைகளும் பூர்த்தி

செய்யப்பட்டிருந்த போதிலும், மூன்றாவது குறைந்த கேள்விதாரருக்கு ஒப்பந்தம் ரூபா 430.84 மில்லியனுக்கு வழங்கப்பட்டிருந்தது. கூறுவிலையின் வேறுபாடு 7.55 மில்லியன் ஆக இருந்தது. செயற்திட்டப் பணிப்பாளரால் குறிப்பிடப்பட்டிருந்த ஆகக் குறைந்த கேள்விதாரரின் முன்னைய பலவீனமான செயலாற்றல் காரணமாக அக் கூறுவிலை கொள்வனவுக் குழுவினால் நிராகரிக்கப்பட்டிருந்தது. எனினும், பலவீனங்களாக குறிப்பிடப்பட்டிருந்த காரணங்கள் ஏனைய ஒப்பந்தங்கள் தொடர்பாகவும் அவதானிக்கப்பட்ட சாதாரண காரணங்களாக கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டது மேலும், ஒப்பந்தத்திற்கான பொறியியலாளரின் மதிப்பீடு ரூபா 300.54 மில்லியனாக இருந்ததுடன் மதிப்பிடப்பட்ட கிரயத்தின் 43 சதவீதத்திற்கு மேற்பட்ட கூறுவிலைப் பெறுமதிக்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது.

## 3.11 செயலாற்றல்

2014 இன் வருடாந்த மதிப்பீட்டின் பிரகாரம் அமைச்சின் செயன் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

பிரதான செயற்பாடுகளுக்கு முரணான செயற்பாடுகள்

அமைச்சு தனது நோக்கங்களுக்கு புறம்பாக செயற்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) அரச நிறுவனங்களுக்காக சீன அரசிடமிருந்து முன்தயார் கட்டிடங்களை இறக்குமதி செய்யும் ஒப்பந்தத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 3,765,519,130 ஆன நிதி ஏற்பாட்டிலிருந்து 2014 ஆம் ஆண்டின்போது ரூபா 3,765,436,515 தொகை செலவிடப்பட்டிருந்தது, 2015 ஆகஸ்ட் 10 ஆந் திகதியளவிலும் அரச நிறுவனங்களுக்கு பொருத்தப்பட்டு கையளிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை திருப்திகரமாகப் பொருத்தப்பட்டமைக்கான நிறுவனத் தலைவர்களின் சான்றிதழ் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, இச்செயற்பாடு நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சின் விடயப் பரப்பிற்குரிய செயற்பாடாக இருந்ததுடன், அச்செயற்பாட்டிற்கு 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 8,576,597,602 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) நுண்ணிய நீர்ப்பாசன முறைமையை ஸ்தாபிப்பதற்காகவும் கட்டிடங்களை திருத்துவதற்கும் மஹாவலி மதியுரை சேவைப் பணியக (தனியார்)

கம்பனிக்கு ரூபா 12,841,372 அமைச்சினால் செலுத்தப்பட்டிருந்தது. பிரதான மற்றும் மத்திய நீர்ப்பாசன முன்மொழிவு முறைமைகளில் அவசர உட்கட்டமைப்பு வசதிகள் புனரமைப்பிற்கு நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அந்த ஏற்பாடு மொரகஹகந்த, ராஜாங்கனய, நிராவிய போன்ற பண்ணைகளில் நுண்ணிய நீர்ப்பாசன முறைமையை ஸ்தாபிப்பதற்கான பிரமாணங்களுக்கு முரணாக செலவிடப்பட்டிருந்தது. அவ்வாறே, மேற் குறித்த கம்பனிக்கு இவ்வாறான செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு தகைமை இல்லாதிருந்தும், அரச கொள்வனவு வழிகாட்டல் கோவையிலிருந்து விலகி அச்செயற்பாடுகள் அமைச்சினால் அக்கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருந்தது.

(இ) நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சின் செயற்பாடுகளுக்குரித்தல்லாத மஹாவலி "பீ" வலயத்தில் உள்ள வெலிகந்த பிரதேசத்தில் யானை வேலியொன்றை நிர்மாணிப்பதற்கு ரூபா 4,772,529 இலங்கை மஹாவலி அதிகாரசபைக்கு அமைச்சினால் செலுத்தப்பட்டிருந்தது. இதற்கென பிரதான மற்றும் மத்திய நீர்ப்பாசன முறைமைகளில் அவசர உட்கட்டமைப்பு வசதிகளை புனரமைப்பதற்கு வருடாந்த பாதீட்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஈ) வட மாகாண வாவிகள், மொரகஹகந்த மற்றும் களு கங்கை யட்டிகங்கை அபிவிருத்தி செயற்பாடுகள் போன்ற செயற்திட்டங்களுக்கு சாத்தியவள கற்கைக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 11,140,417 வடமேல் மாகாண கால்வாய் செயற்திட்டத்தின் சாத்தியவள ஆய்விற்காக 2014 ஆம் ஆண்டின்போது பயன்படுத்தப்பட்டு அச்செலவினம் தவறுதலாக மேற்குறித்த செயற்திட்டங்களின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இச்செயற்பாட்டிற்காக மஹாவலி மதியுரை சேவைப் பணியக (தனியார்) கம்பனிக்கு வழங்கப்பட்ட ஒப்பந்தம் அரச கொள்வனவு வழிகாட்டல் கோவைக்குபுறம்பாக கையளிக்கப்பட்டிருந்தது.

## 3.12 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

பிரதான மற்றும் மத்திய நீர்ப்பாசன முறைமைப் புனரமைப்பிற்கு அமைச்சிற்கு ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 1,500 மில்லியன் நிதி ஏற்பாட்டிலிருந்து நீர் வளச் சபையின் குழாய் நீர் நிர்மாண பழுதுபார்த்தல் மற்றும் தேசத்திற்கு மகுடம்

என்பவற்றிற்கு ரூபா 6,919,734 செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1999 ஒக்தோபர் 13 ஆந் திகதிய 1101/9 ஆம் இலக்க சாரதிகள் சேவை உறுப்புரைக் கோவையின் 7.2 ஆம் பிரிவின் பிரகாரம் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு ஊழியர்களை ஆட்சேர்த்தல் நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், 75 சாரதிகளின் ஆட்சேர்ப்பு நீர்ப்பாசன அமைச்சின் செயலாளரினால் மேற்கொள்ளப் பட்டிருந்தது.

(ஆ) மேலும், மேற்குறித்த சாரதி சேவை உறுப்புரையின் 7.1 பிரிவின் பிரகாரம் இவ்வாறான ஆட்சேர்ப்பின்போது விண்ணப்பங்களைக் கோரல் அரசாங்க வர்த்தமானி மூலம் பிரசித்த அறிவித்தலொன்றின் மூலமோ அல்லது வேறு தகைமையான முறையொன்றின் மூலமோ மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக எந்தவொரு விண்ணப்பதாரிக்கும் விண்ணப்பிப்பதற்கு இருந்த சந்தர்ப்பத்தை இல்லாமல் செய்து குறித்த விளம்பரத்தை நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பிரதேச அலுவலகங்களில் காட்சிப்படுத்துமாறு செயலாளரினால் நீர்ப்பாசன பணிப்பாளர் நாயத்திற்கு வழங்கப்பட்ட அறிவித்தலொன்றின் பேரில் ஆட்சேர்ப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன.இதன் பிரகாரம் இந்த ஆட்சேர்ப்பு பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் அங்கீகரித்த பொருத்தமான முறையொன்றல்ல என்பது அவதானிக்கப்பட்டது.

## 3.13 முகாமைத்துவ நலிவுகள்

------------------------------------------

வாவிகளில் சேற்றை அகற்றும் செயற்பாட்டிற்கு ஈடுபடுத்துவதற்கு கொள்வனவு செய்யப்பட்ட 80 இயந்திர உபகரணங்கள் இருக்கையில் உமா ஓயா பலநோக்கு அபிவிருத்திச் செயற்திட்டத்திற்கும் முருங்கன் பிரதான பொறியியலாளர் விடுதி அலுவலகத்திற்கும் தனியார் வழங்குனரிடமிருந்து இயந்திர உபகரணங்களை வாடகைக்கு பெறறுக்கொள்வதற்கு ரூபா 32,215,571 செலுத்தப்பட்டிருந்தது.

## 3.14 மனிதவள முகாமைத்துவம்

(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறாகக் காணப்பட்டது.

| | பதவியணி வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 23 | 18 | 05 |
| (ii) | மூன்றாம் நிலை | 03 | 01 | 02 |
| (iii) | இரண்டாம் நிலை | 89 | 51 | 38 |
| (iv) | ஆரம்ப நிலை | 44 | 41 | 03 |
| | மொத்தம் | 159 | 111 | 48 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் மீளாய்வாண்டின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை 679 ஆக இருந்த போதிலும், அமைச்சின் மேலதிக செயலாளரின் (நிர்வாகம் மற்றும் நிதி) 2015 ஆகஸ்ட் 05 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் அது 159 ஆக இருந்தமையால் 520 பேரின் வேறுபாட்டிற்கு காரணம் தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) 2014 நவம்பர் 12 ஆந் திகதிய 25/2014 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின்போது நிரந்தர நியமனம் வழங்கப்பட்ட ஊழியர்களின் பெயர்ப் பட்டியலின் பிரதியொன்று கோரப்பட்டிருந்த போதிலும், 2015 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் அத்தகவல்கள் வழங்கப்படாமையால் மேற்குறித்த உள்ளவாறான பதவியணியினரின் எண்ணிக்கையின் சரியான தன்மையை உறுதிப்படுத்த முடியாமல் இருந்தது.

**(ஆ) முறையற்ற விதத்தில் வேறு தரப்பினருக்கு விடுவிக்கப்பட்ட மனித வளங்கள்**

அமைச்சினால் மீளாய்வாண்டின்போது ஏனைய தரப்பினருக்கு முறையற்ற விதத்தில் விடுவிக்கப்பட்ட மற்றும் ஏனைய தரப்பினரிடமிருந்து பெற்றுக்கொண்ட மனித வளங்கள் தொடர்பான விபரங்கள் 2014 பெப்ரவரி 28 ஆந் திகதி கோரப்பட்ட போதிலும், 2015 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் அத்தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. முன்னைய ஆண்டின்போது மஹாவலி அதிகாரசபைக்கு இரண்டு சாரதிகள் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் சுகாதார அமைச்சின் 9 சாரதிகளும் மூன்று தொழிலாளர்களும் முறையற்ற விதத்தில் இந்த அமைச்சில் இணைக்கப்பட்டிருந்தனர்.

**4 தலைப்பு 282– நீர்ப்பாசனத் திணைக்களம்**

**புத்தகங்களும் பதிவேடுகளும் பேணப்படாதிருந்தமை**

திணைக்களத்தினால் பின்வரும் சில புத்தகங்கள் பேணப்பட்டிராததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின்போது அவதானிக்கப்பட்டன.

| **பதிவேட்டின் வகை** | **உரிய விதிகள்** | **அவதானிப்புகள்** |
|---|---|---|
| பொறுப்புகள் பதிவேடு | நிதிப் பிரமாணம் 214 | பேணப்பட்டிருக்கவில்லை |
| திணைக்கள ஒதுக்கீட்டு (வாக்குப் பண) பேரேடு | நிதிப் பிரமாணம் 447(7) | நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. |
| நட்டங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப் பிரமாணம் 110 | நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. |

**4.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

திணைக்களத்தினால் நிதிப் பிரமாணம் 272(2) இன் படி,செயற்பாடுகள் பூர்த்திசெய்யப்படாது 2011, 2012 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்கு உரித்தான ரூபா 1,061,357 கூட்டுப் பெறுமதியான 8 கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் காணாமற் போயிருந்தன.

## 4.3 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதிலளித்தல்

திணைக்களத்திற்கு மீளாய்வாண்டின்போது சமர்ப்பிக்கப்பட்ட 02 கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் முன்னைய ஆண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்ட 02 கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் 2015 மார்ச் 31 ஆம் திகதியளவிலும் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.4 ஒதுக்கீட்டுக் கணக்கு

### ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் அலுவலகங்களினால் வழங்கப்பட்ட ஏற்பாடுகள்

பல்வேறு பணிகளுக்கு ஏனைய 02அமைச்சுக்கள் மற்றும் 02 திணைக்களங்களினால் ரூபா 1,377,564,987 மில்லியனான நிதி ஏற்பாடு திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அந் நிதி ஏற்பாடுகளில் முறையே ரூபா 971,325,999 மற்றும் 5,281,898 என மொத்தமாக ரூபா 976,607,897 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியளவிலும் சேமிப்புக்கள் முறையே ரூபா 377,728,988 மற்றும் ரூபா 23,228,102 என மொத்தமாக ரூபா 400,957,090, அதாவது, வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டில் முறையே 28 மற்றும் 81 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தன. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வனசீவராசிகள் திணைக்களத்திடமிருந்து வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளில் ரூபா 3,842,062 அல்லது 77 சதவீதமும் கமநல அபிவிருத்தி திணைக்களத்திடமிருந்து வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 19,386,039 அல்லது 82 சதவீதமும் குறித்த செயற்பாடுகளுக்கு பயன்படுத்தாமல் சேமிக்கப்பட்டிருந்தன.

(ஆ) நீர்ப்பாசன, நீர்வளங்கள் முகாமைத்துவ அமைச்சினால் ஜின் கங்கை நில்வளா கங்கை நடவடிக்கைகளுக்காக சாத்தியவள ஆய்வொன்றை மேற்கொள்வதற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 5,235,000 ஆன நிதி ஏற்பாடு ரூபா 2,255,345 ஆல் மிகைத்து ரூபா 7,490,345 பயன்படுத்தப்பட்டிருந்தது.

## 4.5 பொது வைப்புக் கணக்கு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இரண்டு ஆண்டுகளைக் கடந்திருந்த ரூபா 54,224,093 தொகையான வைப்புகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் காலாவதியான சகல வைப்புகள் தொடர்பான வருடாந்த அரையாண்டுப் பட்டியல் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை.

## 4.6 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

---

28201 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்று தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 23,790,099 ஆக இருந்ததுடன், அந்த நிலுவை மீதிகள் 1 ஆண்டு முதல் 20 ஆண்டுகள் வரையான கால வீச்சிலானவையாயினும் கடந்திருந்த போதிலும், அந்நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதின் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டன.

(ஆ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தனிப்பட்ட வகைப்படுத்தல் பொழிப்பு மீதிகள் மற்றும் திணைக்களக் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதிகளுக்கிடையே ரூபா 462,976 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(இ) கொழும்பு மாவட்ட நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகத்தின் விழா மற்றும் விசேட முற்பண கடன் பதிவேடுகளில் குறிப்பிடப்பட்ட கடன் மீதி மற்றும் இணக்கக் கூற்றில் குறிப்பிடப்பட்ட மீதிகளுக்கிடையே ரூபா 121,000 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஈ) இட மாற்றம் பெற்றுச் சென்ற 10 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 942,261 கூட்டுத் தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. 2010 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளின்போது மாகாண சபை அலுவலகங்களுக்கு மாற்றலாகிச் சென்ற மூன்று உத்தியோகத்தர்களின் கடன் தொகை தவணை முறையில் அறவிடப்படுவதுடன் ரூபா 128,880 தொகையான பணம் மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

(உ) சம்பளமற்ற விடுமுறையில் வெளிநாட்டிற்குச் சென்றிருந்த மூன்று உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 151,615 தொகை அறவிடப்பட வேண்டியிருந்ததுடன் இவர்களில் இரு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 146,240 தொகையான பணம் 19 ஆண்டுகளாகவும் இன்னுமொரு உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 5,375 தொகை 13 ஆண்டுகளாகவும் நிலுவையாகக் காணப்பட்டன. இரு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 32,175 தொகையான இடர்க் கடன் நிதிப் பிரமாணம் 113 இன்படி புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்படுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக கடந்த ஆண்டு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அம் மீதிகளைப் பதிவழிப்பதற்கோ அல்லது தீர்ப்பதற்கோ திணைக்களம் மீளாய்வாண்டின் இறுதியளவிலும் வரையிலும் தவறியிருந்தது.

(ஊ) இறந்த மற்றும் ஓய்வுபெற்ற 242 உத்தியோகத்தர்கள்/ ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 20,542,389 தொகையான கடன் மீதிகளின் அறவீடு 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிறுத்தப்பட்டிருந்தன. கடன் மீதிகளைத் தீர்ப்பதற்குரிய ஓய்வூதியச் சம்பளப் பணிக்கொடை போதாமை, ஓய்வூதியக் கோவைகளில் குறைபாட்டினால் ஓய்வூதியத்தை தயாரிப்பதற்கு முடியாதிருந்தமை, அரசாங்க விடுதிகள் ஒப்படைக்கப்பட்டிராமை, ஒழுக்காற்று விசாரணைகள் பூர்த்திசெய்யப்பட்டிராமை போன்ற திணைக்களத்தின் நிர்வாக நலிவுகள் காரணமாக இம் மீதி தீர்க்கப்படுவதில் தாமதம் ஏற்பட்டிருந்தது. கடந்த ஆண்டின் கணக்காய்வு அறிக்கையின் மூலமும் இந் நிலை குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் கடன் மீதி தீர்க்கப்படுவதன் முன்னேற்றம் தொடர்பாக கணக்காய்வின்போது திருப்தியடைய முடியாதிருந்தது.

(எ) வேலை இடைநிறுத்தப்பட்டிருந்த 13 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 562,891 தொகையான கடன் அறவிடப்பட வேண்டியிருந்ததுடன் அக் கடனில் 20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழையகடன் மீதிகளும் காணப்பட்டன.

(ஏ) வேலை விலகிய 33 உத்தியோகத்தர்களின் ரூபா 1,589,543 தொகையான கடன் மீதிகள் அறவிடப்பட வேண்டியிருந்தன. இதில் 19 ஆண்டுகள் வரையான நீண்ட காலக் கடன் மீதிகளும் இருப்பது அவதானிக்கப்பட்டது. இக் கடனாளிகளிடமிருந்து அறவிடப்பட

வேண்டியிருந்த கடன் மீதிகளை அவர்களின் ஆதனங்களிலிருந்து, பிணையாளிகளிடமிருந்து அல்லது வாரிசுகளிடமிருந்து அறவிடுவதற்குத் திணைக்களத்தால் நாளதுவரையான நடவடிக்கைகள் எடுக்கப்படாமையால் நீண்ட காலமாக இக் கடன் மீதிகள் நிலுவையாகக் காணப்பட்டன.

## 4.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின்போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### (அ) விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2014 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் படி, திணைக்களத்திடமிருந்த 265 அரசாங்க விடுதிகளில் குடியிருப்பதற்கு உத்தியோகத்தர்கள் முன்வராமை மற்றும் அவை பழுதடைந்த நிலையில் காணப்பட்டமை போன்ற காரணங்களால் நீண்ட காலமாக அவ்வீடுகள் பயன்படுத்தப்படவில்லை.

(ii) பதவிய நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகத்தில் காணப்பட்ட 27 துப்பாக்கிகள், 83 எஸ்.ஜீ.ரவைகள் மற்றும் 272 ரைபள்கள் நீண்ட காலமாக பயன்படுத்தப்படாததுடன் அவற்றைக் கைதவிர்ப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.

(iii) பதவிய நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகத்தில் காணப்பட்ட 1,540 வன எல்லை தூண்கள் (கொங்கிரீட்) 806 வெள்ள எல்லைத் தூண்கள் என்பன 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக பயன்படுத்தப்படாதிருந்தன.

### (ஆ) வருடாந்தப் பொருள் மெய்மையாய்வை மேற்கொள்ளல்

(i) 2014 ஒக்டோபர் 17 ஆம் திகதிய 02/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2014 இன் வருடாந்த பொருள்

மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு 2015 மார்ச் 17 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 14 நீர்ப்பாசன அலுவலகங்களினால் 2015 மே 31 ஆந் திகதியளவிலும் அவ்வறிக்கைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2013 ஆம் ஆண்டிற்குரிய மெய்மையாய்வு அறிக்கைகளில் சுட்டிக் காட்டப்பட்டிருந்த மிகைகள், பற்றாக்குறைகள் தொடர்பாகவும் செய்யப்பட்ட ஏனைய பரிந்துரைகள் தொடர்பாகவும் நிதிப் பிரமாணத்தின்படி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) வெளித் தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

------------------------------------------------------------------------------------------------

திணைக்களத்தினால் சில சொத்துக்கள் முறையற்ற விதத்தில் வெளித்தரப்பினருக்கு விடுவிக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. விபரங்கள் பின்வருமாறு

(i) 2014 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டவாறு திணைக்களத்திடமிருந்த 16 உத்தியோகபூர்வ விடுதிகளில் அத்துமீறிய குடியிருப்பாளர்கள் குடியிருந்த போதிலும் அவர்களை அகற்றுவதற்குச் சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நாற்பத்திரண்டு உத்தியோகபூர்வ விடுதிகள் வேறு திணைக்களங்களுக்கும் நிறுவகங்களுக்கும் முறையாக ஒப்படைக்கப்படாது கையளிக்கப்பட்டிருந்தமை 2014 வருடாந்தக் களஞ்சியப் பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டிருந்தன.

**(ஈ) தீர்க்கப்படாத பொறுப்புகள்**

-------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) திணைக்களத்தால் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒரு வருடத்திற்கும் குறைவான காலப்பகுதியிலிருந்து தீர்க்கப்படாத பொறுப்புகள் ரூபா 433,752,223 ஆகும்.

(ii) நிதிப் பிரமாணம் 94 இன் ஏற்பாடுகளுக்கு முரணாக 29 செலவின விடயங்களில் தேறிய ஏற்பாட்டினை மிகைத்து ஏற்பட்ட பொறுப்புகள் ரூபா 422,034,602 ஆகும்.

(iii) நிதிப் பிரமாணம் 447(4) இன் ஏற்பாடுகளின்படி அனைத்துப் பொறுப்புகளும் வாக்குப் பண பேரேட்டில் குறிபிடப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்தினால் இணங்கப்பட்டடிருந்த பொறுப்புகள் தொடர்பான விபரம் வாக்குப் பணப் பேரேட்டில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iv) தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின்போது ரூபா 7,452,533 பெறுமதியான பொறுப்புகள் கணக்குகளில் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை.

**4.8 இணக்கமின்மை**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்கியிராத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ளன.

| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **பெறுமதி** | **இணக்கமின்மை** |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | |
| நிதிப் பிரமாணம் 272(3) | - | பத்தொன்பது நீர்ப்பாசன அலுவலகங்களுக்குரிய 2014 ஆம் ஆண்டின் கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் 2015 மார்ச் மாதம் வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) பொது நிர்வாகச் சுற்றறிக்கை

| | | |
|---|---|---|
| 2008 திசெம்பர் 31 ஆம் திகதிய 30/2008 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | - | உத்தியோகத்தர் ஒருவருக்கு உரித்தான ஆகக் கூடுதலான இடர்க் கடன் 10 மாத திரண்ட சம்பளம் அல்லது ரூபா 250,000 எனும் இரண்டில் குறைந்த தொகையாக இருந்த போதிலும், நான்கு உத்தியோகத்தர்களுக்கு அந்த எல்லையை மிகைத்து கடன் வழங்கப்பட்டிருந்தது. |

## 4.9 உள்நாட்டு நிதியீட்டத்தின் மூலம் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்

செயற்திட்டம் ஆரம்பிக்கப்படாது கைவிடப்படல் மற்றும் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்படல் மற்றும் செயற்திட்டத் தாமதம் தொடர்பான தெரிவுக்கணக்காய்வுப் பரிசோதனையின்போது கண்டறியப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

### (அ) ஆரம்பிக்கப்படாமல் கைவிடப்பட்ட செயற்திட்டங்கள்

திணைக்களத்தால் பின்வரும் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை

| செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட கிரயம் | வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதி | ஆரம்பிக்கப்படாமைக்கான காரணம் சுருக்கமாக |
|---|---|---|---|
| | ரூபா | | |
| IT/T/SSC/2013/65<br>Construction of Canal Regulator in Paranamagamaela FC 06 and FC 07 at Yodhawewa | 818,792 | 2013.09.18 | நீர் நிறுத்தப்பட்டு குறுகிய காலப்பகுதியில் நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், விவசாய அமைப்பின் உள்ளக பிரச்சினை காரணமாக வேலை |

| | | | |
|---|---|---|---|
| | | | ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| EBD/O&M(SP)/UME/42/2014<br>Construction of 40.0 m long Cannal lining at pannalsSamagi FO FC in Uma Ela Scheme | 1,020,000 | 2014.06.18 | விவசாய அமைப்பிற்குச் சொந்தமான வரண்ட வாய்க்காலின் இரண்டு பக்கங்களில் விவசாயிகளின் எதிர்ப்புக் காரணமாக உரிய வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| EBD/O&M(SP)/AMB/86/2014<br>Construction of Cannal lining for new distributor Cannal for Thawana FO at 0+000 km in second link cannel in Ambewela Scheme | 1,061,000 | 2014.08.04 | இந்நிர்மாண வேலை உரிய இடத்தின் கால்வாய் கம்பனி யொன்றுக்குரிய தேயிலைத் தோட்டத்தின் ஊடாக செல்வதால் அவர்களின் எதிர்ப்புக் காரணமாக வேலை ஆரம்பிக்க முடியாமல் இருந்தது. |
| EBD/MWKND/10/2013<br>Replacing Damaged Repair and Improvements of Hoist 800m in KandeElaMeepilimanawewa | 1,038,715 | 2013.08.14 | கடந்த ஆண்டில் பெய்த மழை காரணமாக கந்தே கால்வாயின் நீர் மட்டம் ஆண்டு பூராகவும் குறையாது இருந்தமையால் ஒப்பந்தகாரருக்கு அதனை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது. |
| ஹ/நீ.பா/விஅ/LAS/2013/113 (கஜபா)<br>Supplying and laving Precast hume pipe in LSA Programme | 199,629 | குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | விவசாயஅமைப்பின் வேண்டுகோளின் பேரில் மதிப்பீடு தயாரிக்கப்படாதிருந்த போதிலும், விவசாய அமைப்பு இப்பணியை நிறை வேற்றியிருக்கவில்லை. |
| ஹ/நீ.பா/விஅ/LAS/2013/116 (சுஹந்த)<br>Supplying and laving Precast hume pipe in LSA Programme | 212,720 | குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | விவசாய அமைப்பின் வேண்டுகோளின் பேரில் மதிப்பீடு தயாரிக்கப்படாதிருந்த போதிலும், விவசாய அமைப்பு இப்பணி நிறைவேற்றியிருக்கவில்லை. |
| ஹ/நீ.பா/விஅ/மென/2014/33<br>Improvenents to SLB CPO 35 and SLB CPO 36 cannel | 124,135 | குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | விவசாய அமைப்பின் அதிகாரப் பிரதேசத்தில் பெரும் போகம் தாமதமாக ஆரம்பிக்கப்பட்டதன் காரணமாக அக்காலப்பகுதியில் நிர்மாண வேலையை நிறைவேற்ற முடியவில்லை |

**(ஆ) ஆரம்பிக்கப்படாமல் கைவிடப்பட்டிருந்த செயற்திட்டங்கள்**

திணைக்களத்தால் பின்வரும் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், அச்செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்பட்டிருந்தன.

| செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட கிரயம் | ஆரம்பிக்கப்பட்ட திகதி | 2014 திசெம்பர் 31 ஆந் திகதியளவிலான செலவினம் | கைவிடப்பட்டமைக்கான காரணம் |
|---|---|---|---|---|
| | ரூபா | | ரூபா | |
| **IE/T/SSC/2012/125** Construction of Canal lining at 3+730 km Lunugamwehera LBMC | 1,612,650 | 2012.10.15 | 1,150,296 | நீர் விநியோகிக்கப்பட்டதன் பின்னர் கீழ் பிரதேசங்களில் கழுவிச் செல்லப்படாமையால் தற்போது இந்நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக கருதப்பட்டுள்ளது. |
| **IE/T/SSC/2012/166** Improvements DiyasyayayaBasnawa in Thissa Tank Scheme | 286,370. | 2012.11.05 | 99,679 | நிர்மாணம் மந்த கெதியில் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் கால்வாய் தயார் செய்யப்பட்டு- பூர்த்தி செய்யப்பட்டபோது நீர் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டமையால் தடவைக்குரிய நீர் விநியோகிக்கப்பட்டமையால் தடவை நீர் கால எல்லைக்குள் எஞ்சிய நிர்மாணங்களை மேற்கொள்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும், விவசாய அமைப்பினால் காணப்படும் மதகு போதுமானதாகவும் கால்வாய் சுத்திகரிக்கப்பட்டதன் பின்னர் சிக்கல்கள் தீர்க்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தமை. |
| **IE/T/SSC/2013/02** | 1,237,702 | 2013.01.21 | | நிர்மாணத்தை மேற்கொள்ளும் போது ஒப்பந்தகாரர் மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| Rehabilitation of DC 03 From 1+300 km to 3+090 in RB Tract in Thissa Division | | | விவசாய அமைப்பிற்கு இடையே ஏற்பட்ட முருகல் நிலைமை காரணமாக நிர்மாண வேலைகள் இடை நடுவில் நிறுத்தப்பட்டிருந்தமை . |
| **IE(HAM)MS/RUH UNUPURA/2014/07**<br><br>Construction of Retaining wall for NCB cannal from 200m to 350m (L.B.side) Ridiyagama scheme | 1,975,012 | - | நீர் விநியோகம் |

**(இ) செயற்திட்டங்கள் நிறைவேற்றுதலில் தாமதம்**

---------------------------------------------------------------------------

திணைக்களத்தால் செயற்திட்டங்களை நிறைவேற்றும் போது கீழே காட்டப்பட்ட தாமதங்கள் பின்வரும் அவதானிக்கப்பட்டன.

| செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட கிரயம் | ஆரம்பிக்கப்பட்ட திகதி | பூர்த்தி செய்ய வேண்டிய திகதி | பூர்த்தி செய்த திகதி | 2014 திசெம்பர் 31 ஆந் திகதியளவிலான செலவினம் | கைவிடப்பட்டமைக்கான காரணம் |
|---|---|---|---|---|---|---|
| ----------------- | --------------- | -------------- | ------------- | ----------- | ----------<br>ரூபா | ------------- |
| EDB/EI/RRMI/AMB/53/2014 Construction of 30 m long Cannal lining at 1+200 km in RB main cannel (part 2) in Ambewela Scheme | 746,000 | 2014.07.07 | 2014.09.21 | 2014.12.05 | - | சமர்ப்பிக்கப்படவில்லை |
| EDB/EI/RRMI/AMB/54/2014 Construction of 30 m long Cannal lining at 1+230 km in RB main cannel (part 2) in Ambewela | 733,000 | 2014.07.07 | 2014.09.21 | 2014.12.03 | - | சமர்ப்பிக்கப்படவில்லை |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| Scheme | | | | | | |
| EDB/EI/RRMI/AMB/55/2014 Construction of 30 m long Cannal lining at 1+260 km in RB main cannel (part 2) in Ambewela Scheme | 746,000 | 2014.07.07 | 2014.09.21 | 2014.12.03 | - | சமர்ப்பிக்கப்படவில்லை |
| EDB/O&M(SP) DMW/72/2014 Construction of 96 m long Cannal lining along FC-01 LB main cannel Dambvinna Scheme | 976,000 | 2014.07.25 | 2014.10.03 | - | - | சமர்ப்பிக்கப்படவில்லை |
| HD/HO/LUNUPOTHTHAWA TANK/2014/1 Construction of Lunupoththawa Tank | 7,424,810 | 2104.09.01 | - | - | 343,110 | இந்நிர்மாணத்தின் திட்டங்களில் அத்திவாரத்தில் உள்ள குறைபாடுகள் காரணமாக நிர்மாண வேலையை நிறைவேற்ற முடியாமல் இருந்தது. |
| HD/HO/HELAMULLA TANK/2014/1 Construction of HelamullaTank | 8,498,810 | 2014.09.01 | - | - | 1,699,763 | கடந்த தினங்களில் நிதிஏற்பாடு இல்லாமையால் நிறுத்தப்பட்டிருந்தது. தற்போது வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |
| RBW/W/UO/CATCH/ROSSET/BD)/03/2014 Construction of Rossetwaththa Tank | 3,260,580 | 2014.09.01 | - | - | - | ரொசட் தோட்டத்தின் குடியிருப்பாளர்களால் குளத்தை அமைப்பதற்கு காட்டப்பட்ட எதிர்ப்பு காரணமாக இந்நிர்மாணத்தின் வேலைப் பகுதி தற்போது இடைநிறுத்தப்பட்டது. |

## 4.10 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

------------------------------------------------------------------------

திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மையில் காணப்பட்டன. தெரிவுக் கணக்காய்வின்போது

கண்டறியப்பட்ட அத்தகைய சில கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

(அ) நீர்ப் பிரிவில் சேவை புரிந்து 2002 மே 09 ஆந் திகதி கட்டாயமாக ஓய்வுபெறச் செய்யப்பட்ட களஞ்சியப் பொறுப்பாளரின் 2002 ஆம் ஆண்டிற்கு முன்னரான சேவைக்காலத்தின்போது ஏற்பட்டிருந்த அளவீட்டு உபகரணங்களின் பற்றாக்குறையின் பெறுமதி ரூபா 4,313,239 என அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் இது தொடர்பாக தொடரப்பட்ட வழக்குத் தீர்ப்பின் பிரகாரம் ரூபா 411,051 மாத்திரம் அவரிடமிருந்து அறவிடப்பட்டிருந்தது. நிதிப் பிரமாணம் 104(4) இன் பிரகாரம் 03 மாதங்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய முழுமையான அறிக்கையையும் சமர்ப்பிப்பதற்கு 2015 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை தவறியிருந்தது. 13 வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற இந்த பற்றாக்குறையை அறவிடுவது தொடர்பான பின்தொடர் நடவடிக்கை இடம்பெற்றிருக்கவில்லை.

(ஆ) தலைமை அலுவலகத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள நீர்ப்பாசனப் பணிப்பாளர் (இயந்திரவியல்) ரஷ்ய பல்கலைக்கழகமொன்றில் பெற்றுக் கொண்ட பட்டப்படிப்பினைத் தகைமையாகக் கருதி திணைக்களத்தில் ஆட்சேர்க்கப்பட்டிருந்தார். உத்தியோகத்தர் தாம் பட்டயப் பொறியியலாளர் எனக் குறிப்பிடப்பட்டு அவுஸ்திரேலிய பொறியியலாளர் நிறுவனமொன்றின் உறுப்பினர் சான்றிதழொன்றை சமர்ப்பித்திருந்தார். அச்சான்றிதழை அடிப்படையாகக் கொண்டு அவருக்கு இலங்கை பொறியியலாளர் சேவைப் பிரமாணக் குறிப்பின் பிரகாரம் II ஆம் தரத்திற்கு பதவி உயர்வு வழங்கப்பட்டு 2014 ஆம் ஆண்டின்போது I ஆம் தரத்திற்கு பதவி உயர்விற்கான பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. எனினும், அவரின் ஆரம்பப் பட்டம் இலங்கையின் இயந்திரவியல் பட்டத்திற்கு சமமானதா என திணைக்களத்தினால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே உத்தியோகத்தர் அவுஸ்திரேலிய பொறியியலாளர் நிறுவனத்தின் பட்டயப் பொறியியலாளரின் உறுப்புரிமை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வில்லையென கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்பட்டது. இதன் பிரகாரம் அந்த உத்தியோகத்தர் இயந்திரப் பொறியியலாளராக திணைக்களத்தில் ஆட்சேர்க்கப்பட்டமை சர்ச்சைக்குரியதாக இருந்ததுடன் ஆட்சேர்க்கப்பட்டதன் பின்னர் வழங்கப்பட்டிருந்த மற்றும் 2014 திசெம்பர்31 ஆந் திகதி வரையிலும் பரிந்துரைக்கபட்டிருந்த சகல பதவி

உயர்வுகளுக்கும் குறிடப்பட்டிருந்த தகைமைகள் பூர்த்தி செய்யப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) 2013 ஆம் ஆண்டின்போது திணைக்களத்தின் 04 தொழிலாளர்களுக்கு மூன்று மாதச் சலுகையுடனான பருவகால அனுமதிச்சீட்டுக்களைப் பெற்றுக்கொள்வதற்காக அவர்களை எழுதுவினைஞர்கள் எனப் போலியாகக் குறிப்பட்டு புகையிரதத் திணைக்களத்திற்கு விண்ணப் பத்திரமொன்றை அனுப்பியிருந்ததுடன் அத்தவறான ஆவணங்களைத் தயாரித்த குற்றச்சாட்டின் பேரில் குறித்த ஊழியர்கள் சேவையிலிருந்து நீக்கப்பட்டிருந்தனர். விண்ணப்பத்தைப் பரிந்துரை செய்த நீர்ப்பாசனப் பணிப்பாளர் (இயந்திரவியல்) தொடர்பாக முறையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.11 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களத்தால் ஏற்படுத்தப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றவையாகக் காணப்பட்டன. அவதானிக்கப்பட்ட அத்தகைய சந்தர்ப்பங்கள் சில கீழே காட்டப்பட்டுள்ளன.

### (அ) அதிகாரமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

தற்காலிக, அமைய (நாளாந்தம்), பிரதியீட்டு, ஒப்பந்தம் அல்லது சலுகை அடிப்படையில் நீரப்பாசனத் திணைக்களத்திற்கு ஆட்சேர்க்கப்பட்டிருந்த ஊழியர்கள் எனக் குறிப்பிட்டு 2014 நவம்பர் 12 ஆந் திகதிய 25/2014 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் 1,686 ஊழியர்களுக்கு 2014 ஆம் ஆண்டின் போது நிரந்தர நியமனம் வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின்போது பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) மேற் குறித்த சுற்றறிக்கையின் முதலாவது பந்தியின் பிரகாரம் திணைக்களத்தில் ஆட்சேர்க்கப்பட்டு அதுவரை சேவையில் ஈடுபட்டிருந்த ஊழியர்களுக்கே நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டிய போதிலும், முறையான நியமனக் கடிதத்தின் மூலம் சேவைக்கு ஆட்சேர்க்கப்பட்டதாக உறுதிப்படுத்தப்படாத ஊழியர்களும் நிரந்தரமாக்கப்பட்டிருந்தனர். அதில் அதிகளவிலானோர் தற்காலிக (ad hoc) சேவையில்

ஈடுபடுத்தப்பட்டிருந்த காரணத்தினால் மேற்குறித்த சுற்றறிக்கையினால் அவர்கள் மேவுகை செய்யப்படாததால் அவர்களை நிரந்தரமாக்க முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) மேற் குறித்த சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியின் பிரகாரம் 2014 ஒக்தோபர் 24 ஆந் திகதியில் உள்ளவாறு தொடர்ச்சியாக 180 நாட் சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திராத 16 ஊழியர்களுக்கு அக் குறைபாட்டைக் கருத்திற்கொள்ளாமல் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டிருந்ததாக தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின்போது கண்டறியப்பட்டது.

(iii) 2013 சனவரி 30 ஆந் திகதிய 03/2013 (நிர்வாகம்04) ஆம் இலக்க நீர்ப்பாசனத் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் ஆட்சேர்க்கப்படும் அனைத்து ஊழியர்களும் கூடியது 5 மாதங்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுச் சேவை வகுதி மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை அவ்வாறான ஊழியர்களுக்கு மேற் குறித்த பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தியின் பிரகாரம் தொடர்ச்சியான சேவைக்காலம் நிலவியதாகக் கருதப்பட்டு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டிருந்தது.

(iv) மேற் குறித்த பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் ஆட்சேர்க்கப்பட்ட பதவிகளுக்கே ஊழியர்களுக்கான நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டிய போதிலும்,அந்த ஏற்பாடுகளை மீறி தற்காலிக ஊழியர்கள், எழுதுவினைஞர்கள், திட்டமிடல் உதவியாளரகள், தொழில்நுட்ப உதவியாளர்கள், களஞ்சிய உதவியாளர்கள், சாரதிகள் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் போன்ற பதவிகளுக்கும் நிரந்தரமாக நியமிக்கப்பட்டிருந்தனர். 2015 மார்ச் 18 ஆந் திகதிய DMS/1217/VII ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தினால் பொது நிர்வாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக நிரந்தரமாக்கப்பட்டுள்ளதாகவும் அத்தவறை சரி செய்து அறிக்கையிடுமாறு நீர்ப்பாசனப் பணிப்பாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக முறைப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2013 மார்ச் 24 ஆந் திகதிய EST-4/PEMNT/0/227 ஆம் இலக்க தாபனப் பணிப்பாளரின்

கடித்தினால் பொது நிர்வாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை மிகைத்து நடவடிக்கை எடுப்பதற்கு பணிப்பாளருக்கு இயலுமை இல்லையென அறிவிக்கப்பட்டிருந்தது.

(v) நீர்ப்பாசனத் திணைக்களத்தின் ஆட்சேர்ப்பு நடைமுறை ஏற்பாடுகளின் பிரகாரம் ஆட்சேர்ப்பின் ஆகக்கூடிய வயதெல்லை 45 வருடங்களாக இருந்த போதிலும், அவ்வயதெல்லையை விஞ்சி ஊழியர்கள் தொழிலாளர்கள், கிறீசர், நீர்க் காப்பாளர், காவலாளிகள், தொழில்நுட்பக் கலைஞர்கள், ஒட்டுனர்கள், வார்ப்பாளர்கள்,தச்சுத் தொழிலாளர்கள், தகர வேலையாட்கள், மேசன்மார் போன்ற பதவிகளில் நிரந்தரமாக்கப்பட்டிருந்தனர். இவற்றுக்கிடையே கட்டாய ஓய்வு எல்லைக்கு அண்மித்த வயதான 55 முதல் 58 வரையான காலவீச்சிலான ஊழியர்களும் இருந்தனர்.

(vi) 2013 சனவரி 08 ஆந் திகதிய DMS/G2/56/15/01/(vol.1) ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் திணைக்களம் பதவியணியினரின் எண்ணிக்கை அங்கீகரிக்கபட்ட கடிதத்தின் மூலம் திணைக்களத்தின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் எழுதுனர் பதவி இல்லாமல் செய்யப்பட்டிருந்தன. அது தொடர்பாக கவனம் செலுத்தப்படாமல் திணைக்களத்தில் சேவை புரிந்த 181 பேர் எழுதுவினைஞர்கள் பதவிகளில் நிரந்தரமாக்கப்பட்டிருந்தனர்.

(vii) 2013 ஒக்தோபர் 11 ஆந் திகதிய அமப/13/1166/508/017ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் ஓராண்டு பயிற்சி காலத்தின் பின்னர் நிரந்தர ஓய்வூதியம் உட்பட பதவிகள் வழங்கும் அடிப்படையில் பயிலுனர் தொழில்நுட்ப உதவியாளர் பதவிக்கு 2014 பெப்ரவரி 14 ஆந் திகதி ஆட்சேர்க்கப்பட்டிருந்த 136 பேருக்கு ஆட்சேர்ப்பு நிபந்தனைகள் அனைத்தும் மீறப்பட்டு மேற் குறித்த பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் கீழ் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டிருந்தது. இந்த ஊழியர் குழாம் 2015 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் கல்கமுவ நீர்ப்பாசன பயிற்சி நிலையத்தில் உத்தேச பயிற்சி பாடநெறியையும் பூர்த்தி செய்திருக்கவில்லை.

## 4.12 மோசடியான தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

---

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின்போது மோசடித் தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

### (அ) போலியான நியமனங்கள்

---

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின்போது பின்வரும் போலியான கடிதங்களின் பேரில் நியமனம் வழங்குவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருந்தது.

(i) அம்பாறை மற்றும் மட்டக்களப்பு நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலங்களில் 15 களஞ்சியக் காப்பாளர்கள் மற்றும் தொழிலாளர் பதவிகளுக்காக நியமனம் வழங்குவதற்குரித்தாக வழங்கப்பட்டிருந்த நியமனக் கடிதங்களில் காணப்படும் கையொப்பம் முன்னால் நீர்ப்பாசன பணிப்பாளரின் கையொப்பத்துடன் பொருந்தவில்லையெனவும் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தினால் இவ்வாறான நியமனங்கள் வழங்கப்படாதிருந்தமையும் கணக்காய்வின்போது கண்டறியப்பட்டது. அந்நியமனக் கடிதங்களின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நியமனக் கடிதங்களைத் தயாரிப்பதற்கு திணைக்களத்தின் கடிதத் தலைப்புக்கள் மற்றும் முன்னால் நீர்ப்பாசனப் பணிப்பாளரின் உத்தியோகபூர்வ முத்திரை என்பன பயன்படுத்தப்பட்டமையால் அது திணைக்களத்தின் எவரேனும் உத்தியோகத்தர்கள் குழுவொன்றினால் போலி ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு மோசடியான செயற்பாடொன்று மேற்கொள்ளப்பட்டிருந்ததை உறுதிப்படுத்துவதற்கு உரிய அதிகாரிகளுக்கு தேவையான நடவடிக்கைகளைஎடுப்பதற்காக தொடர்புபடுத்தப்பட்டிருக்க வில்லை.

### (ஆ) நிரந்தர நியமனங்கள் வழங்குவதற்காக போலி ஆவணங்களைத் தயாரித்தல்

---

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2014 நவம்பர் 12 ஆந் திகதிய 25/2014 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியின் பிரகாரம் தொடர்ச்சியாக 180 நாட்கள் திருப்திகரமான சேவைக்காலத்தை

பூர்த்தி செய்திருந்த ஊழியர்கள் மாத்திரம் நிரந்தரமாக்கப்பட வேண்டிய போதிலும், ஹிரியால, நாச்சாத்துவ, வாரியபொல,இங்கினிமிட்டிய மற்றும் கண்டி பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகங்களிலும் கொழும்பு தலைமை அலுவலகத்திலும் நிர்ணயிக்கப்பட்ட தினங்கள் பூர்த்தி செய்யப்படாத 13 ஊழியர்களுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன. எதிர்பார்க்கப்பட்ட தினங்களின் அளவினை உறுதிப்படுத்துவதற்காக போலியான தகவல்கள் உள்ளடக்கப்பட்ட விண்ணப்பங்கள், வரலாற்று குறிப்புகள், போலி மருத்துவ அறிக்கைகள், நோய் தொடர்பான துண்டுகள் தயாரிக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டதுடன், அந்தக் கணக்காய்வு அவதானிப்புகள் தொடர்பாக திணைக்களம் எவ்வித பின்தொடர் நடவடிக்கைகளையும் எடுத்திருக்கவில்லை.

(ii) சேவை புரிந்த நாட்களின் எண்ணிக்கை, செலுத்திய சம்பளம் போன்ற தகவல்கள் போலியாக உள்ளடக்கப்பட்ட வரலாற்று தகவல்கள் மற்றும் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்ட திணைக்களத்தின் ஒரு நாளோ அல்லது சேவை புரியாத 07 பேருக்கு பதவிய மற்றும் ஸ்ரீபுர பிரதேச நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகங்களிலும் கொழும்பு தலைமை அலுவலகத்திலும் சேவை நிரந்தரமாக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(iii) தேசிய நீர் வளங்கள் மற்றும் நீர் வடிகாலமைப்பு சபையின் மூலம் ஆசிய அபிவிருத்தி வங்கி உதவியின் கீழ் புத்தளம் மற்றும் சிலாபம் மாவட்டங்களில் செயற்படுத்தப்பட்ட (திணைக்கள மேற்பார்வையின் கீழ் செயற்படுத்தப்பட்ட) உலர்வலய நகர நீர் மற்றும் சுகநலன் செயற்திட்டத்தின் தொழில்நுட்ப வேலைப் பரிசோதகராக 06 மாதங்கள் ஒப்பந்த அடிப்படையில் சேவை ஈடுபடுத்தப்பட்டு செயற்திட்ட நிதியத்திலிருந்து சம்பளம் செலுத்தப்பட்ட ஊழியரொருவர் திணைக்கள ஊழியரென போலியான நியமனக் கடிதத்தைத் தயாரித்து 25/2014 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் கீழ் திணைக்கள தொழில்நுட்ப ஊழியர் பதவியில் அவருக்கு நிரந்தர பதவி வழங்கப்பட்டிருந்தது.

## 4.13 இழப்புகளும் நட்டங்களும்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மூன்று நிதி மோசடிச் சம்பவங்களிலிருந்து ரூபா 475,033 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. இப்பணம் நிதி மோசடி இடம்பெற்று 5 வருடங்கள் முதல் 34 வருடங்கள் வரையான காலம் கடந்திருந்த போதிலும், நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் நட்டத்தை அறவிடுவதற்கும் புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கும் திணைக்களம் தவறியிருந்தது. இப் பெறுமதி ரூபா 666,585 எனத் தவறாக ஒதுக்கீட்டுக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்தது.

## 4.14 தீர்க்கப்பட்டிராத கணக்காய்வுப் பந்திகள்

திணைக்களத்திற்கு உரித்தான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட குறைகள் தொடர்பாக திணைக்களத்தினால் சீராக்கப்படாத பந்திகளுக்கான தொடர்பு கீழே காட்டப்பட்டுள்ளது.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையுடனான தொடர்பு | | தொடர்புபட்ட விடயம் |
|---|---|---|
| **ஆண்டு** | **பந்தி இல.** | |
| 2006 | 3.1(அ) | சுகலாதேவி வாவி செயற்திட்டத்தின் கீழ் பொறியியல் உதவியாளர் மேற்கொண்டிருந்த முறைகேடு |
| 2006 | 3.1(ஆ) | வெலி ஒயா செயற்திட்டத்தின் கீழ் இடம்பெற்றுள்ள முறைகேடுகள் |
| 2006 | 2.4.1 | போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து ஆதனக் கடன் பெற்றுக்கொண்டமை |
| 2006 | 7.2(அ) | வெஹெரகல செயற்திட்டத்திற்கு கொங்கிரீட் கலவை இயந்திரமொன்றை கொள்வனவு செய்தல். |

| | | |
|---|---|---|
| 2008 | 7(இ)(i) | வாகனம் ஒன்று விபத்திற்குள்ளானமையால் ரூபா 210,000 நட்டம் ஏற்பட்டிருந்தமை. |

## 4.15 முகாமைத்துவ நலிவுகள்

-----------------------------------------

தெரிவுக் கணக்காய்வின்போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1946 இன் 32 ஆம் இலக்க நீர்ப்பாசனக் கட்டளைச் சட்டத்திற்கு நடைமுறைக்கு ஏற்றவகையில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 ஆம் ஆண்டின்போது நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பதவியணியினர் சீராக்கப்பட்டதை அடுத்து அதனை மறுசீரமைப்பதற்கு உரித்தாக சரியான ஒழுங்கமைப்புக் குறிப்பொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. திணைக்களத்தில் 42 சிவில் மற்றும் இயந்திர பணிப்பாளர் பதவிகள் காணப்பட்டதுடன், ஒவ்வொரு பதவிக்குரிய கடமைப் பட்டியல் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 4.16 மனிதவள முகாமைத்துவம்

---------------------------------------------

(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர்

| | பதவியணி வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 410 | 275 | 145 | 10 |
| (ii) | மூன்றாம் நிலை | 180 | 29 | 151 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 2,799 | 2,330 | 638 | 169 |
| (iv) | ஆரம்ப நிலை | 3,060 | 3,756 | 194 | 890 |
| | | 6,449 | 6,662 | 1,128 | 1,341 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஆட்சேர்க்கப்பட்டிருந்த மிகைப் பதவியணியினர் தொடர்பாக முறையான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(ii) நிரந்தர பதவியணி 6,4497 என கணக்காய்விற்கு நீர்ப்பாசனப் பணிப்பாளரால் உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் இது 4,869என2014 வருடாந்த மதிப்பீட்டிற்கு உள்ளடக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 1,580 ஆன வேறுபாட்டிற்கான காரணம் தெளிவாக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 2014 நவம்பர் 12 ஆந் திகதிய 25/2014 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் கீழ் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டிருந்த ஊழியர்களின் எண்ணிக்கை 1,686 என நீர்ப்பாசனப் பணிப்பாளரால் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும், கணக்காய்விற்கு வழங்கப்பட்ட அறிக்கையில் 1,728 ஆக குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், 42 ஊழியர்களின் வேறுபாட்டிற்கு காரணம் தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை. அத்தோடு ஆட்சேர்ப்பின் போது இடம்பெற்ற முறைகேடுகளினால் இந்த ஆளணி திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை எண்ணிக்கைக்கு உள்ளடக்குவதற்கு முடியாமல் இருந்தது.

**(ஆ) முறையற்ற விதத்தில் வேறு தரப்பினருக்கு விடுவிக்கப்பட்ட மனிதவளங்கள்**

திணைக்களத்தால் மீளாய்வாண்டின்போது வேறு தரப்பினருக்கு முறையற்ற விதத்தில் விடுவிக்கப்பட்டிருந்த மனிதவளங்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | ஊழியர் வகை | பதவியணி எண்ணிக்கை | ஏனைய தரப்பினர் | விடுவிக்கப்பட்டிருந்த காலப்பகுதி |
|---|---|---|---|---|
| (i) | திட்டமிடல் கலைஞர் | 01 | சனாதிபதி விசாரணைப் பிரிவு | குறிப்பிடப்பட்டிருக்கவில்லை |
| (ii) | திட்டமிடல் கலைஞர் | 01 | சனாதிபதி விசாரணைப் பிரிவு | 2005 மார்ச் முதல் |
| (iii) | விதும் உதவியாளர் | 01 | சனாதிபதி விசாரணைப் பிரிவு | 2001 மே முதல் |
| (iv) | விதும் உதவியாளர் | | சனாதிபதி விசாரணைப் பிரிவு | 2005 மார்ச் முதல் |
| (v) | திட்டமிடல் கலைஞர் | 01 | நீர்ப்பாசன | 2008 சனவரி முதல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | முகாமைத்துவப் பிரிவு | |
| (vi) | திட்டமிடல் கலைஞர் | 01 | ஆட்பதிவுத் திணைக்களம் | 2013 சனவரி முதல் |
| (vii) | திட்டமிடல் கலைஞர் | 01 | இலங்கை மஹாவலி அதிகாரசபை | 2013 ஒக்டோபர் முதல் |
| (viii) | பொறியியல் உதவியாளர் | 01 | மஹாவலி அதிகாரசபை | 2005 மார்ச் முதல் |
| (ix) | பொறியியல் உதவியாளர் | 01 | சனாதிபதி விசாரணைப் பிரிவு | 2013 ஏப்ரல் முதல் |
| | | --------- | | |
| | மொத்தம் | 09 | | |
| | | ==== | | |